வெள்ளி

VELLI


News Magazine

30 சதம்




# பெண்கள் விடுதலை இயக்கம்!

டிசம்பர் '71



# ஜெயலலிதாவை கி. வா. ஜ. சந்திக்கலாமா?

'குமுதம்' ஏற்பாடு செய்ய, ஜெயலலிதாவின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்து பேசியிருக்கிறார் கி. வா. ஜ. இதை ஏதோ பெரிய தவறு என்று சிலர் நினைக்கிறார்கள். ஜெயலலிதாவை வெறும் 'சினிமாக்காரி' என்ற குறைவான கண்ணோட்டத்தில் கணிக்கிறார்கள்: நடிகர்களைக் 'கூத்தாடிகள்' என்று இகழ்ந்த காலம்போய், 'கலைஞர்கள் - என்று கௌரவிக்கும் காலம் இது: ஒரு சிறந்த நடிப்புக் கலைஞராக ஜெயலலிதாவை, ஒரு பத்திரிகை ஆசிரியரும் இலக்கிய கர்த்தாவுமான கி. வா. ஜ. சென்று பார்த்தது தவறுதானா என்பதை நாம் சற்றுச் சிந்தித்த பின் முடிவு செய்வதுதான் நல்லது.



'வெள்ளி' அடுத்த இதழ்

## பொங்கல் சிறப்பிதழாக

10 - 1 - 1972 ல்

மலர்கிறது!

# ஒரு கசப்பான 'பட்ஜெட்'டின் கதை

இலங்கேசு மிகுந்த கவலையோடு இருக்கிறான். எதிர்காலம் அவனுக்கு இருண்டுகிடக்கிறது. காலம் நன்றாக இல்லை.

பல வருடங்களுக்கு முன்னால் அவன் என்ன மாதிரி வாழ்ந்து கொண்டிருந்தான்! குடியிருந்தது பெரிய பங்களா! வயிறுபுடைக்கச் சாப்பாடு - உயர்தரமான சாப்பாடு. வெளியே போய்வரக் கார். ரயிலில் போவதானால் முதல் வகுப்புத்தான். ஆனால்,

அவன் குடியிருந்த பங்களாவும், பயணம் செய்த காரும், உண்ட உணவும் அவனுடையவையல்ல; எல்லாம் அவனுடைய எஜமானான ஒரு வெள்ளைக்காரனுக்கே சொந்தமானவை.

இலங்கேசு அந்த வெள்ளைக்காரனிடம் வேலைக்காரனாக இருந்தான். வெள்ளைக்காரத்துரை நல்லமனிதன். இலங்கேசுவுக்கு ஒரு குறையுமில்லை. சந்தோஷமாகவே வாழ்ந்துவந்தான்.

ஆனால்,

ஒவ்வொரு சமயத்தில் அவன் மனத்தில் ஒரு ஏக்கப், கவலை. ஊருலகத்தில் அவனை யாரும் மதிப்பதில்லை. 'வேலைக்கார இலங்கேசு' என்று ஏளனமாகத்தான் சொல்வார்கள். வேலையை விட்டுவிட்டு 'எங்கேயாவது ஓடிப்போய் சுதந்திரமாக வாழ்வோமோ' என்று நினைக்கத் தொடங்கினான்; துரை விடுவாரா என்றும் சந்தேகம்.

இதற்கிடையில் அவனைப்போலவே வேலைக்காரர்களாக இருந்த அவனுடைய சகபாடிகள் சிலர் 'வேலைக்கார வாழ்வு வேண்டாம்' என்று ஒரு மாதிரி அடிமை வாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டு வந்துவிட்டார்கள்.

இலங்கேசுவின் 'துரை'யும் சீமைக்குப் புறப்பட்டான்.

இலங்கேசு சுதந்திர மனிதனுகிவிட்டான்.

ஆனல்,

அவனுக்கு உழைக்கப் பிழைக்கத் தெரியவில்லை. ஏதோ தன்னுலானதை உழைத்தான். அவனுடைய சொகுசான வாழ்க்கைக்கு அது போதவில்லை. அவனுக்கு ஏழெட்டுப்பிள்ளைகள். எல்லாரும் படிக்கப்போகிறேமென்ருர்கள். செலவு அதிகரித்தது; வெள்ளைக்காரன் கொடுத்துவிட்டுப் போன சொற்பப்பணத்தை எடுத்துச் செலவழித்தான். அது மிக விரைவில் கரைந்து போய்விட்டது. பிறகு கடன் வாங்கத் தொடங்கினுன். வரவுக்கு மேலே செலவு.

இப்போது வட்டிக்கும் உழைக்கவேண்டியிருக்கிறது. தன்னுல் முடியுவரை கஷ்டப்பட்டுதான் பார்க்கிருன்.

எவ்வளவு உழைத்தாலும் செலவு தலைக்குமேலே வந்து கொண்டிருக்கிறதே! வட்டிப்பணமே மலையாக வந்து கொண்டிருக்கிறதே!

இலங்கேசுவுக்கு கவலை தொட்டுவிட்டது.

இதற்கிடையில் அவனுடைய மனைவி வருடந்தவருமால் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருந்தாள்.

பிள்ளைகளும் சாப்பாடு, உடுப்பு, படிப்பு என்ற மட்டோடு நில்லாமல் வேறு பல நவீன நாகரிக வசதிகளும் வேண்டுமென்று அடம் பிடிக்கிருர்கள்.

இடையிலே ஒரு பிள்ளைக்கு வெறிபிடித்து, அவன் அடித்து நொருக்கியதில் வீட்டிலிருந்த முக்கியமான பண்டங்கள் நாசமாகிவிட்டன.

அவற்றையெல்லாம் திருத்துவதற்கும் புதிது வாங்குவதற்கும் பணம் வேண்டும்!

பிள்ளைகளின் மனம் நோகக் கூடாதென்று நினைத்து மாடாய் உழைக்க அவன் தயார். ஆனல், மேலும் மேலும் கடனை வாங்கிக் கொண்டேயிருந்தால் அதன் முடிவு என்ன?

இலங்கேசு யோசிக்கத் தொடங்கியிருக்கிருன்.

சிக்கனம் செய்யாமல் வாழ்க்கை வசதிகளைக் கட்டுப்படுத்தாமல் இனித் தலையெடுக்க முடியாதென்பதை இப்போது நன்ருகப் புரிந்து கொண்டுவிட்டான்.

இலங்கேசுவின் புதிய 'பட்ஜெட்' அவனுடைய பிள்ளைகளுக்கு கசக்கிறது.

இன்று மட்டுமல்ல; இன்னும் பல வருடங்களுக்குக், கசக்கத்தான் போகிறது!

# பெண்கள் விடுதலை இயக்கம்!

**"மலரவன்"**

"ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக வாழ்வோம்" என்ற விடுதலைக் கோஷம் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி போன்ற மேற்கு நாடுகளில் இப்போது மிகவும் அமர்க்களப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஆண்களுக்குரிய அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் வேண்டும் என்று இந்த இயக்கத்தினர் கோரிக்கைவிடத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்போதுள்ள சமுதாய அமைப்பில், பெண்கள் ஒரு இரண்டாந்தரப் பிரஜைகளாகவே மதிக்கப்படுகிறார்கள் என்பது இவர்களுடைய குற்றச்சாட்டு! இப்போது ஆணின் ஒரு நுகர்வுப் பொருளாக பெண் இருக்கின்றாளே தவிர ஆணுக்குரிய பல உரிமைகள் அவளுக்கு மறுக்கப்பட்டு வருகின்றன என்பது இவர்களுடைய வாதம்!

மிகவும் சின்னஞ்சிறு விஷயங்களில்கூட, பெண்கள் எவ்வளவுதூரம் தாழ்வாக நடத்தப்படுகிறார்கள் என்பதை, இவர்கள் தங்களது பிரச்சாரத்தின் மூலம் எடுத்துக்காட்டி வருகிறார்கள்.

உதாரணத்திற்குக் கூறுவதானால், திருமணத்திற்கு முன்னர் "மிஸ் பவளம் சின்னத்தம்பி"யாக இருக்கும் ஒரு பெண், திருமணத்திற்குப் பின்னர் "மிஸிஸ் பவளம் கந்தவனம்" ஆக பெயர் மாற்றம் அடைகிறாள்; ஆனால் ஸ்ரீமான் கந்தவனமோ திருமணத்திற்கு முன்னருஞ்சரி, பின்னருஞ்சரி எவ்வித பெயர் மாற்றமும் இல்லாமல் "ஸ்ரீமான் கந்தவன"மாகவே இருக்கிறார்! இந்த மாதிரியான விஷயங்களெல்லாம் இந்த இயக்கத்தினருக்கு எரிச்சல் மூட்டுவனவாக இருக்கின்றன!

ஆங்கில மொழியிலுள்ள Miss, Mrs, என்ற இரு வேறுபட்ட அர்த்தங்களைத் தரக்கூடிய சொற்களுக்குப் பதிலாக எப்படி எல்லா ஆண்களையும் Mr. என அழைக்கின்றோமோ, அதே போல எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரியாகக் குறிப்பிடக்கூடிய முறையில் Ms என்ற சொல் பயன்படுத்தப்படவேண்டும் என்பது இவர்களது கோரிக்கை! இதே போலவே, Boycott என்ற சொல்

Girlcott எனவும் History என்ற சொல் Herstory எனவும் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்!


ஆங்கில மொழியிலுள்ள பல சொற்கள் பெண்களை ஒரு இரண்டாந்தர பிரஜைகளாக மதிப்பிடுகின்றன என்றும், அத்தகைய சொற்கள் அனைத்தும் மாற்றப்பட வேண்டும் எனவும் இவர்கள் கோருகின்றார்கள்! இந்தச் சொற்பட்டியல் இவர்களால் தயாரிக்கப்பட்டு இருக்கிறது! இந்தச் சொற்களை எப்படி மாற்றவேண்டும் என்பதற்கான வழிவகைகளையும் இவர்களே தெரிவித்தும் இருக்கிறார்கள்!

பெண்களின் தன் மானம் சற்று மாற்றுக் குறைகிறது என்று இவர்கள் கருதுகின்ற அத்தனை விஷயங்களிலுமே இவர்கள் தலையிட்டு இருக்கிறார்கள்! இவர்கள் கவனத்துக்கு எந்த விஷயமுமே தப்பிவிடவில்லை!

எல்லாத் துறைகளிலும் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்பதும், ஆண்களுக்குக் கொடுக்கப்படும் அதே சம்பளவிகிதம் பெண்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதும், தாங்கள் விரும்பிய நேரங்களில் கருச்சிதைவு செய்து கொள்ளும் உரிமை பெண்களுக்கு இருக்கவேண்டும் என்பதும், குழந்தைப் பராமரிப்பு போன்ற விஷயங்களில் பெண்களுக்கு இருப்பது போன்ற பொறுப்பு ஆண்களுக்கும் இருக்கவேண்டும் என்பதும், சொத்துரிமை விஷயங்களில் ஆண் பெண் என்ற வேறுபாடே இருக்கக்கூடாது என்பதும் இவர்களுடைய கோரிக்கைகளுட் சிலவாகும்!

பத்திரிகை விளம்பரங்களிலும் எதற்கெடுத்தாலும் பெண்களின் படத்தை அரைகுறை ஆடையுடன் போட்டு விளம்பரம் செய்வதையும் இவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அத்தகைய விபரங்களைக் காணும்போதெல்லாம்

---



✣ சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால், 23-12-69 'சுதந்திரன்' இதழில் நெல்லை ஐ. நடேஸ் என்ற வாசகர், "தனிப்பெருந் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்தால்..." என்ற கேள்வியைக் கேட்டிருந்தார்! அதற்குப்பதில் அளித்த "குயுக்தி" யார் "மீண்டும் ஐந்து ஆண்டுகள் அஞ்ஞாத வாசம் போய் விடுவார்" என்று பதில் சொல்லியிருந்தார்! அந்தப் பதில்தான் எவ்வளவு தீர்க்கதரிசனம் நிறைந்ததாக இருக்கிறது. இப்போது தமிழ் காங்கிரஸ் தலைவர் எங்கே? முற்றாகவே இவர் அரசியலைத் துறந்துவிட்டாரா அல்லது அடுத்த தேர்தலின்போது தான் தலையைக் காட்டுவாரா?

அவற்றைக் கிழித்து எறிவதற்கு இந்த இயக்கத்தினர் தயங்குவது கிடையாது!

சில வாரங்களுக்கு முன்னுல் நியூயார்க் நகரத்தில் இந்த இயக்கத்தினர் நடத்திய ஊர்வலத்தில் இவர்கள் கோஷித்த சுலோகங்கள் மிகவும் அதிர்ச்சி தரத்தக்கவையாக இருந்தன.

இந்தக் கோரிக்கைகளுக்காக இவர்கள் இடையிடையே போராட்டங்களும், ஊர்வலங்களும் நடத்துகிருர்கள். இவர்கள் நடாத்தும் போராட்டங்கள் மிகவும் புதுமையானவையாக இருப்பதினுல் பளிச்சென்று வெகு விரைவில் எல்லாரையும் கவர்கின்றன!

ஆண்கள் பெண்களை ஒரு நுகர்வுப் பொருளாகக் கருதுவதைக் கண்டிக்கும் முகமாக இந்த இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் ''ப்ரா'' அணியாத ஒரு இயக்கத்தைத் தொடக்கியிருக்கிருர்கள். அமெரிக்க ''ப்ரா'' உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், ஆகியோரைத் திகைக்க வைக்கக்கூடிய அளவுக்கு இவர்களது இத்தப் போராட்டம் வெற்றி கண்டிருக்கிறது.

''திருமணம் என்பது கூலி கொடுக்காமல் வேலைக்காரி தேடுதல்'' என்றும் ''திருமணம் என்பது சட்ட பூர்வமான கற்பழிப்பு'' என்றும் இவர்கள் கோஷித்தபோது அமெரிக்க நாடு முழுவதுமே அதிர்ச்சி அடைந்தது! இந்த இயக்கம் படு வேகமாக இளம் பெண்கள் மத்தியில் பரவி வருவதையும் அப்போதுதான் உலகம் உணர்ந்தது! ஏனெனில், இந்த ஊர்வலத்தில் பங்கு கொண்டோரில் தொண்ணூறு வீதத்துக்கும் அதிகமானேர் இளம் பெண்கள்!

கேற் மில்லெற் என்ற அமெரிக்கப் பெண்மணிதான் முதன் முதலில் இந்த இயக்கத்தைத் தொடக்கியவர்.

தொடக்கப்பட்டு ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே உலகின் பல பல பகுதிகளுக்கும் இந்த இயக்கம் பரவிவிட்டது.

இலங்கையில் இந்த இயக்கம்இன்னமும்பரவாவிட்டாலும் கூட, இந்தியாவில் பல்கலைக்கழகங்களில் படிக்கும் மாணவிகள் மத்தியிலும், நடுத்தரவர்க்கத்துக்கு மேற்பட்ட நிலையிலுள்ள பெண்கள் மத்தியிலும் சிறிது சிறிதாக இந்த இயக்கத்துக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது. டெல்லிப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவிகள் சிலர் இந்த இயக்கத்துக்கான தங்களது ஆதரவை பகிரங்கமாகவே சில தினங்களுக்கு முன்னுல் தெரிவித்து இருக்கிருர்கள்.

இந்த இயக்கம் பரவாத நிலையிலேயே, இந்தியா இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் பெண்கள்தான் பிரதமர் பதவியில் இருக்கிருர்கள்! இந்த இயக்கம் இங்கு பரவத்தொடங்கினுல் இந்த நாட்டு ஆண்களின் நிலைமை என்னவாகுமோ.....? நினைக்கவே பயமாயிருக்கிறது!

✣ ஈழத்து முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவர் சில நாட்களுக்குமுன் வெளியான ஒரு வார வெளியீட்டில் 'மலை'யைப்பற்றி ஒரு கட்டுரை வரைந்திருந்தார். 'நாடோடி'ப் பாணியில் இவர் எழுத முனைந்த அக் கட்டுரையில் ஒரு வசனம் "...ஆனால் 'மலையிடைப் பிறவா மணியே" எனக் கண்ணகியை விளிப்பதன் மூலம், மலையிடைப் பிறந்த மணி மட்டமானது தான் என்பதைக் குத்திக்காட்டி மலைகளையே மட்டந்தட்டியிருக்கிறார் இளங்கோ அடிகள்" என்றிருக்கிறது!

இளங்கோ அடிகள் 'அலையிடைப் பிறவா அமுதே' என்றும் 'யாழிடைப் பிறவா இசையே' என்றுங் கூடக் குறிப்பிட்டிருக்கிறார். நமது எழுத்தாளரின் கருத்துப்படி அலையிடைப் பிறந்த அமுதையும், யாழிடைப் பிறந்த இசையையுங்கூட இளங்கோ அடிகள் மட்டந்தட்டிவிட்டிருக்கிறார்! இதைப்பற்றி தற்செயலாக ஒரு தமிழறிஞருடன் கதைக்க நேர்ந்தபோது அவர் என்னிடம் சொன்னது: 'போகட்டும்; அது ஒரு நகைச் சுவைக் கட்டுரை; எமது எழுத்தாளர் சும்மா 'ஜோக்' அடித்திருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள்!'

✣ தேன்கூட்டில் இருக்கும் தேன் மெழுகு வேலையாள் தேனீ எனப்படும் பூச்சிகளால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றின் வயிற்றின் கீழ்ப்பகுதியில் தேன்மெழுகு மெல்லிய துகள்களாகச் சுரக்கப்படுகின்றது. கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள தேன்மெழுகு பல வகைப்பட்ட கலைகளிலும், தொழில்களிலும் ஆண்டுதோறும் உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

✣ வீட்டில் உள்ள கோழிக் கூடங்கள் மழைநீர் உட்செல்லக் கூடிய முறையில் அமைந்திருந்தால் கோழிகள் எப்பொழுதும் ஈரத்திலேயே இருக்கின்றன. இதனால் கோழிகளுக்கு நோய் உண்டாகக் கூடும். இதேமாதிரி போதிய காற்றோட்டமில்லாவிட்டாலும் கோழிகளின் உடல் நிலை கெட்டுவிடுகிறது. எனவே, வீட்டில் கோழிக்கூடம் அமைக்கும் போது காற்றோட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்வதும், மழைநீர் உட்செல்லாதவாறு பாதுகாப்பு அளித்தலும் மிகவும் அவசியம் ஆகும்.



**1938-ம் ஆண்டில் 'கல்கி'யையும் 'மாலி'யையும் ஆகாயவிமானத்தில் இலங்கைக்கு அனுப்பி பிரயாணக்கட்டுரை எழுதுவித்தது 'ஆனந்தவிகடன்'**

## 'ஆனந்த விகடன்' பிரயாணக்கட்டுரைகள்

பிரயாணக் கட்டுரை இலக்கியத்தை தமிழ் மொழியில் வளர்த்த பெருமையில் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகைக்கு நிறைந்த பங்கு உண்டு. அந்தக் காலத்தில் இன்று இருப்பது போல் நினைத்தவுடன் போய் வரக்கூடிய டகோடா, வைக்கவுண்ட், ஸ்கைமாஸ்டர், போயிங் போன்ற விமானங்கள் கிடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் அமரர் 'கல்கியும்', ஓவிய மன்னர் 'மாலி'யும் ''இலங்கைப் பிரயாணம்'' என்ற தலைப்பில் பிரயாணக் கட்டுரை எழுதுவதற்காகவே, 1938ம் வருடத்தில் பல இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு சின்னஞ்சிறு காற்றாடி விமானத்தில் ஏறி இலங்கைக்கு வந்து போனார்கள்! அமரர் கல்கிக்குப் பின்னர் ஆனந்த விகடன் ஆசிரிய பீடத்தில் அமர்ந்த அமரர் தேவனும் ''ஐந்து நாடுகளில் அறுபது நாட்கள்'' என்ற பிரயாணக் கட்டுரைத் தொடரை விகடனில் எழுதி வந்தார்! இக் கட்டுரைத் தொடரை எழுதுவதற்காகவே தேவனை ஐந்து நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவர ஏற்பாடு செய்திருந்தார் ஆனந்த விகடன் அதிபரான வாசன்! இதற்குப் பின்னர் அமைச்சர் சுப்பிரமணியத்தினால் எழுதப்பட்ட ''நான் சென்ற சில நாடுகள்'' என்ற கட்டுரைத் தொடர் விகடனில் வெளிவந்தது! அமைச்சர் சுப்பிரமணியத்தின் உலகச் சுற்றுப் பிரயாண அனுபவங்கள் மிகவும் சுவையுடன் இதில் சொல்லப்பட்டிருந்தன! இப்போது மணியனின் ''இதயம் பேசுகிறது'' கட்டுரைத் தொடர் வெளிவந்து கொண்டிருக்கிறது! பல்வேறு நாட்டு மக்களினது வாழ்க்கை முறைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் அறிந்து கொள்ளத்தக்கதாக இந்தக் கட்டுரைத் தொடரை எழுதுவதற்காக இரண்டு தடவைகள் 'ஆனந்த விகடன்' மணியன் உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு வந்திருக்கிறார்! இரண்டு தடவையும் இவரது பயணத்துக்கான முழுச் செலவையும் ஆனந்த விகடன் நிறுவனம்தான் அளித்தது! பணத்தைத் தண்ணீர் பட்ட பாடாகச் செலவழித்து சில சில காரியங்களைச் செய்வதில் 'ஆனந்த விகடன்' பத்திரிகை நிறுவனத்துக்கு நிகரான வேறு எந்த தமிழ்ப் பத்திரிகை நிறுவனமுமே கிடையாது!

✣ 55 வயதான பாடகர், நடிகர் பிராங்க்சினட்ரா தன் தலை வழுக்கையை மறைப்பதற்காக 3000 டாலர் செலவில் தலையில் மயிர் வளர ஒரு அறுவை சிகிச்சை செய்து கொண்டுள்ளார். தலையில் மயிர் சற்று நெருக்கமாக வளரும் இடத்திலிருந்து கொஞ்சம் மயிரை எடுத்து அறுவைசிகிச்சை மூலமாக வழுக்கையான இடத்தில் அவற்றை பதித்துத் தைப்பதே இந்த சிகிச்சையாகும். புதிதாகப் பதிக்கப்பட்ட முடி, நாளடைவில் வேர்விட்டு உண்மையாகவே அந்த இடத்தில் வளர ஆரம்பித்து விடுகிறது. அதிக பொருட் செலவில் செய்யப்படும் இந்த அறுவை சிகிச்சையை தகுதியும் திறமையும் பெற்ற விசேஷ நிபுணர்களால்தான் செய்யமுடியும்!

✣ இலங்கையில் மொத்தம் கால் லட்சத்திற்கும் மேற்பட்ட பைத்தியங்கள் இருக்கிறார்களாம். ஆனால் இவர்களில் சுமார் இருபதினாயிரம்பேர் மட்டுமே அரசாங்க மனநோய் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்களாம். இப்படிக் கூறுகிறது சுகாதார இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று. இலங்கையில் குணப்படுத்தப்படாத பைத்தியங்கள் பலர் இருப்பதற்கு மனநோய் வைத்தியர்களின் பற்றாக்குறையே காரணமாகும். இலங்கையின் பழம் பெரும் மனநோய் ஆஸ்பத்திரியான அங்கொடையில் வாரந்தோறும் நாலாயிரம் மனநோயாளிகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகிறார்கள்? ஆனால் அங்கு ஆகப் பதினான்கு மனநோய் டாக்டர்கள்தான் சேவையில் இருக்கிறார்கள்!

✣ சஞ்சிகைகள் என்பவற்றைக் காட்டிலும் தினசரிப் பத்திரிகைகளுக்கு ஒரு முக்கியமான கடமை உண்டு. நாட்டு நடப்பை உள்ளது உள்ளபடி தரவேண்டியது தினசரிப் பத்திரிகைகளின் கடமை. செய்திகளைத் திரித்தோ அல்லது ஒரு பக்கச் சார்புடனே வெளியிடுவது பத்திரிகா தர்மம் ஆகாது! இலங்கையிலிருந்து வெளிவரும் சில தினசரிகளைப் பார்க்கும் போது தனிப்பட்ட முதலாளிகளின் கைகளில் இவை இருப்பதைக் காட்டிலும், அரசாங்கமே இவற்றை எடுத்து நடத்துவது தான் நல்லது என்று சொல்லத் தோன்றுகின்றது!

✣ கொள்கை இல்லாத அரசியல்

உழைத்துப் பெறாத செல்வம்

ஒழுக்கம் இல்லாத வர்த்தகம்

குணமும் பண்பும் இல்லாத கல்வி

மனச்சான்றைப் புறக்கணித்து அடையும் இன்பம்

மனிதத்தன்மையற்ற விஞ்ஞானம்

தியாக உணர்வற்ற வழிபாடு.

இவற்றால் எவ்வித பயனுமில்லை! இதனை ஒருதரம் படித்தால் மட்டும் போதாது. படித்தபின் நீண்ட நேரம் சிந்திக்க வேண்டும். சிந்தித்த பின்னர் ஆத்ம சோதனையில் ஈடுபட வேண்டும். ஊருக்கு ஒருவராவது இந்தக்காரியத்தைச்செய்தாலே, இந்த நாடு எவ்வளவோ உயர்ந்து விடும்!

✣ அந்த நாட்களில் சுதந்திரக்கவி சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களை திரைப்படங்களில் பயன்படுத்தும் உரிமை ஏவி. எம் செட்டியாரிடம் மட்டுமே இருந்தது! பாரதியாரது பாடல்கள் தேசியப் பாடல்கள் என்றும், அதனை யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்றும் கூறி தாங்கள் தயாரித்த ''பில்ஹணன்''



என்ற திரைப்படத்தில் பாரதியாரின் இரண்டு பாடல்களைச் சேர்த்துக் கொண்டார்கள் டிகேஎஸ் சகோதரர்கள்! மெய்யப்ப செட்டியார் ஐம்பதினாயிரம் ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடர்ந்தார்! விவகாரம் சூடு பிடித்துக் கொண்டது! கடைசியில் மெய்யப்ப செட்டியாரே மனமுவந்து அந்தப் பாடல்களை பொதுச்சொத்து ஆக்குவதற்கு ஒப்புதல் தந்தார்! ஆனால், இப்போதோ பாரதியாரின் பாடல்களை திரைப்படங்களில் கேட்பதே அபூர்வமாக இருக்கிறது!

✣ தும்பு மூலம் செய்யப்படும் நில விரிப்புக்கள், வேறும் பல தும்புத்தயாரிப்புக்கள் என்பனவற்றுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது! கனடா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகளில் இத்தகைய பொருட்களுக்கு நல்ல சந்தை இருக்கிறது! நமது நாட்டுத் தொழில் துறையில் புதிய முயற்சிகளும், புதிய சிந்தனைகளும் இடம் பெறவேண்டும்! அப்போதுதான் இந்த நாடு முன்னேற முடியும்!


✣ உணர்ச்சிகள் மனிதர்களுக்கு இயல்பானவை! பல மனிதர்கள் ஒன்றாகக் கூடுகின்ற இடங்களில், இந்த உணர்ச்சிகளின் காரணமாக, மோதல்கள் உண்டாகக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படலாம் என்பதும் உண்மை! எனவே, மனிதர்களை நாகரிகமான ஒரு சமுதாயமாக வாழவைக்க வேண்டுமானால், அவர்களது உணர்ச்சிகளை வழிமுறைப்படுத்தி, செம்மை செய்வது எப்படி என்பது பற்றிய தெளிவான ஒரு கருத்து சமுதாயத்தில் இருக்கவேண்டும்!

✣ தமிழ் மரபு பழமையானது மட்டுமன்றி உலகப் பெருநோக்கும், பரந்த உணர்வும் உடையது! 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்ற தத்துவம் தமிழ்ப் பேச்சாளர்களது பேச்சிலும், தமிழ் எழுத்தாளர்களது எழுத்திலும் மட்டும் இடம் பெற்றால் போதாது! தமிழர்களின் வாழ்வில் இந்தத் தத்துவம் வேரூன்ற வேண்டும்! வர வர குறுகிய நோக்கமும், பிரதேச உணர்ச்சியுமல்லவா நம்மை ஆட்கொள்ளப் பார்க்கின்றன!


✣ ஈழநாட்டின் முதுபெரும் எழுத்தாளர்களில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அற்புதமாக இலக்கியம் படைக்கக்கூடியவர் ஒரே ஒருவர்தான்! அவர்தான் மலையகத்தைச் சேர்ந்த ஸி. வி. வேலுப்பிள்ளை! இவர் தாராளமான கட்டுரைகளை எழுதி இருக்கிறார்! தேயிலைத்தோட்டப் பகுதிகள் முதன் முதலாக மலையகம் என்று குறிப்பிடப்பட்டது இவரது கட்டுரைகளில் தான்! ''பத்மாஜனி'' என்ற ஆங்கிலக் கவிதை நாடக நூலையும், தேயிலைத் தோட்டத்து மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் ''வாழ்வற்ற வாழ்வு'' என்ற நவீனத்தையும் ''வழிப்போக்கன்'' என்ற ஆங்கிலக் கவிதை நூலையும், ''தேயிலைத்தோட்டத்திலே'' என்ற தலைப்பில் மலையக வாழ்வைப் பிரதிபலிக்கும் ஆங்கிலக் கவிதை நூலையும் இவர் எழுதி வெளியிட்டு இருக்கிறார்! மலையக மக்களின் அவலக்குரல் உயர்மட்டத்தில் வாழ்ந்து வருவோரின் நெஞ்சில் சென்று தொடக்கூடிய முறையில் இவர் படைத்த இலக்கியங்கள் இருக்கின்றன!

✣ இனிப்பு அதிகமாக உண்பது எவ்வளவு ஆபத்தானதோ அதேயளவு ஆபத்தானது தான் உப்பை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்வதும்! வயது ஏற ஏற உணவில் சேர்க்கப்படும் உப்பின் அளவு குறைந்துகொண்டு வரவேண்டும்! அப்போதுதான் உடல் நலம் சீராக இருக்கும்!

✣ இலவசமாக மாணவர்களுக்கு வழங்கப்படும் விஸ்கோத்துக்கள் சில பாடசாலைகளில் தக்க பாதுகாப்பின்றி வைக்கப்படுகின்றன! இதன் காரணமாக அணில், எலி, காகம் போன்றவை இவற்றின் மீது படையெடுக்கின்றன! இவற்றினால் அசுத்தமாக்கப்பட்ட இந்த விஸ்கோத்துக்களை உண்பதற்கு மாணவர்கள் அருவருக்கின்றனர்! யாரோ கொடுக்கிறார்கள், அதைச் சீராகப் பாதுகாத்து விநியோகம் செய்வதற்குக் கூட எமக்குக் கஷ்டமாக இருக்கிறது!



✣ 1935ம் ஆண்டு தயாரான ''சதிலீலாவதி'' படத்தில் நடிக்கத் தொடங்கிய எம். ஜி. ஆர். கதாநாயகனாக உயர்வதற்கு பன்னிரண்டு ஆண்டுகள் பிடித்தன! கதாநாயகனாக நடிக்கத் தொடங்கி புகழேணியின் உச்சிக்குப்போன எம். ஜி ஆர் அந்த உச்ச ஸ்தானத்திலேயே இன்றுவரைக்கும் இருந்து வருகிறார்! இவ்வளவு நீண்ட காலத்துக்கு உச்சப் புகழுடன் இருக்கும் கதாநாயக சினிமா நடிகர் வேறு எந்த நாட்டிலுமே கிடையாது!



✣ யாராக இருந்தாலுஞ்சரி, ஏதாவது விஷயமாகக் கடிதம் எழுதினால், அவர்களை மதித்து உடனே அதற்குப் பதில் எழுதும் பழக்கம் உள்ளவராக இருக்கிறார் கம்யூனிட் தோழரான வி. பொன்னம்பலம்! கட்சி ரீதியில் இவருடன் மாறுபட்டவர்கள் கூட, இவரது இனிய பண்புகள் காரணமாக. இவரைப் பெரிதும் விரும்புகிறார்கள்!

✣ ஐ. நா நிறுவனத்தின் நிதி நிலைமை படுமோசமாகிக் கொண்டு வருகிறது. தமது பத்துவருட பதவிக் காலத்தில் தற்பொழுது உள்ளதைப் போன்ற ஒரு நிதி நெருக்கடி இதற்கு முன்னர் ஏற்பட்டது கிடையாது என்று ஐ. நா. பொதுக் காரியதரிசி ஊ தான்ட் அறிவித்துள்ளார். பல வல்லரசு நாடுகள் தாம் செலுத்த வேண்டிய பாக்கிப் பணத்தை செலுத்தாமல் இருக்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்து நீடித்தால் ஐ. நா வில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கே சம்பளம் வழங்க முடியாத ஒரு நிலைமை ஏற்படலாமாம்!

✣ வைத்திய ஆராய்ச்சிக்கான நோபல் பரிசு இம்முறை அமெரிக்க டாக்டரான ஏர்ல் சதர்லண்ட் என்பவருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

✣ பெரும்பாலான அரசாங்க இலாகாக்களும் கூட்டுத்தாபனங்களும் தனிப்பட்டவர்களின் கட்டடங்களிலேயேஇயங்கி வருகின்றன! சொந்தக் கட்டடங்களைக் கட்டக்கூடிய முடிக்குரிய காணிகள் ஏராளமாக இருந்துங்கூட இந்த நிலைமை தான் தொடர்ந்து நீடித்து வருகிறது! சமீபத்தில் கணக்கெடுத்துப் பார்த்தபோது. கட்டட வாடகையாக அரசாங்கம் ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபாவை செலவிட்டு வருகின்றது என்ற பயங்கரமான உண்மை வெளியாகி இருக்கிறது!

✣ இரண்டு பேர் மட்டுமே அமர்ந்து செல்லக் கூடிய ஒரு புரட்சிகரமான கார் இப்பொழுது பிரிட்டனில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இளம் ஜோடிகளைக் கருத்தில் கொண்டு படைக்கப்பட்ட இந்த அதிசயக் கார் மூன்று சில்லுகளைக் கொண்டது, விமானத்தின் முனைபோன்று உருவாக்கப்பட்டிருக்கும் இந்தக் காரைச் சுலபமாக இயக்கலாம். விலையும் மிகவும் குறைவு. இதன் உச்ச வேகம் மணிக்கு 70 மைல்களாகும். ஒரு கலன் பெட்ரோலில் 60 மைல்வரை இதில் பிரயாணம் செய்யலாம்!

# விஷம் குடித்தவருக்கு நீங்கள் உதவமுடியுமா?

திடீரென்று ஏற்படும் மன விரக்தியினால் விஷத்தைக் குடித்து உயிரை மாய்த்துக் கொள்ளும் பழக்கம் இப்போது அதிகரித்து வருகிறது. அப்படியான சந்தர்ப்பத்தினால் பாதிக்கப்பட்டவரின் அருகில் நாம் இருக்க நேர்ந்தால் என்ன செய்யவேண்டும்? டாக்டர் முரளீதர் தரும் குறிப்புகள் இவை!

உடனடியாக, நமக்குத் தெரிந்த முதலுதவியைச் செய்ய வேண்டும். விஷத்தை, வாந்தி மூலமாக வெளியே கொண்டுவர முற்பட வேண்டும். இதற்குப் பல முறைகள் இருக்கின்றன. அவற்றுள் சில பின் வருமாறு:—

1. ஏராளமான தண்ணீர் குடிக்கச் செய்து வாந்தி எடுக்கச் செய்தல்.

2. அன்ன பேதி எடுக்குமாறு, பெர்ரி சல்பேட் ஒரு அவுன்ஸ் முதல், இரு அவுன்ஸ் வரையில், உப்புத் தண்ணீரில் கரைத்து, வாய் வழியாகப் புகட்டலாம்.

3. வெந்நீரில் உப்பைக் கரைத்து 2, 3 முறைகொடுக்கலாம்.

4. கடுகுத் தூளை, வெந்நீரில் கரைத்து, வாந்தி ஆகும் வரைக்கும் கொடுத்து வரலாம்.

5. வெல்லம் கரைத்த நீரில், படிகாரத் தூளைக்கரைத்து, பத்து நிமிடத்திற்கு ஒரு முறை, வாந்தி எடுக்கும் வரை கொடுத்து வரலாம்.


6. வெந்நீரில் மயில் துத்தம் (துருசு) பதினைந்து நெல் எடை வரை, கரைத்துக் கொடுக்கலாம்.

7. ஒரு கோழி முட்டையின் வெள்ளைக் கருவைக் குளிர்ந்த தண்ணீரில் குழைத்துக் கொடுக்கலாம். வயிற்று வலிக்கு பனிக்கட்டி நிரம்பிய பையை வயிற்றுக்கு மேல் வைக்கலாம். கை கால்களில் சூடு உண்டாவதற்கு, வெந்நீர்ப்பையையும், வெந்நீர்ச் சீசாவையும் வைக்கலாம்.

இவற்றைச் செய்து வரும் பொழுதே, டாக்டரை அழைத்து வர ஆள் அனுப்பி விட வேண்டும். டாக்டர் வரவில்லையானால், தனியார் மருத்துவ மனையில், பொதுவாக இது போன்ற கேசுகளை எடுக்க மாட்டார்கள்; எனவே, அரசாங்க மருத்துவ மனைக்கு உடனடியாக எடுத்து போயாக வேண்டும்.

—'நல்வழி'

✣ "சினிமா உலகில் நல்லவர் என்று யாரையும் நம்பாதே! யாரைச் சந்தித்தாலும் கெட்டவர் என்றே நினை! அவர் நல்லவர் என்று நிரூபிக்கும் வரை அவரை நம்பாதே!— இதுதான் சினிமாத் துறைக்கு வந்த பின்னர் எனக்குக் கிடைத்த மறக்க முடியாத புத்திமதி. இதைச் சொன்னவர் திரையுலகில் நீண்ட அனுபவம் பெற்றவர். அவர் பெயரை வெளியிட எனக்கு இஷ்டமில்லை"



என்று சமீபத்தில ஜெயலலிதா சொல்லியிருக்கிருர்! இவர் சொல்லாவிட்டால் ரசிகர்களுக்குத் தெரியாதா? இவருடைய அம்மா சந்தியாதான் அந்தப் புத்திமதியைச் சொல்லியிருப்பார்! நடிகையாக இருந்து சினிமாத் துறையில் நன்கு அனுபவப்பட்டவரல்லவா இவருடைய அம்மா!


✣ நவீன மருந்து வகைகள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ள சில நுண் கிருமிகள் மனிதனை மீண்டும் தாக்க முயல்வது ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. இத் தாக்குதலுக்கு மனிதன் இலக்காகி சரண் புகவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர். இதன்படி ஏற்கெனவே மருந்துகள் மூலம் இப்போது கட்டுப்படுத்தப் பட்டுள்ள நோய்கள் மீண்டும் மனிதனைத் தாக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுஉள்ளனர்!

✣ ஒரு சாதாரண தமிழாசிரியராக வாழ்வைத் தொடங்கியவர் 'கலைவாணி' தம்பித்துரை. சமீபத்தில் இவர் காலமாகிய போது பல லட்சக் கணக்கான ரூபா மூலதனமுள்ள தொழில்களின் அதிபராக விளங்கினுர்! பாடசாலைப் புத்தக வெளியீட்டுத் துறையில் ஒரு சாதனையையே ஏற்படுத்திய தம்பித்துரை, அத்தொழிலை அரசாங்கம் 'பறித்து'க் கொண்டபோது மனம் மடிந்து ஓய்ந்துவிடவில்லை. சில நூறு ஏக்கர் நிலத்தில் விவசாயத்தைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியிருக்கிருர்! உழைப்பும் திறமையுமிருந்தால் நிச்சயம் உயர்ந்துவிடலாமென்பதற்கு இவர் நல்ல உதாரணம்!

✣ ஆபிரிக்கா, நியூசீலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வசிக்கும் ஆதிவாசிகள் பலவித பூச்சிகளை உணவாகக் கொள்ளுகின்ருர்கள். தத்துவெட்டிப் பூச்சி, சில் வண்டு, கம்புப்பூச்சி, வண்டு, புழு, கூட்டுப்புழு, கறையான், பெரிய எறும்பு, நீர்த் தேள், தேவீப்புழு, தேவீக் கூட்டுப் புழு என்பனவெல்லாம் இம் மனிதர்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன.

✣ இங்கிலாந்து நாட்டுப்பள்ளிக்கூடங்களில் பாடத்திட்டங்களை அமைத்துக் கொள்வதில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எல்லோரும் கட்டாயமாக ஒரே பாட முறையைத்தான் பின்பற்றவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. அந்தந்த பிரதேச சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பாடத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. பள்ளிப் படிப்பை முடிக்கின்ற குழந்தைகள் ஓரளவு கல்வித்திறன் பெற்றிருக்கவேண்டும்' என்பதுதான் அடிப்படையாக இருக்கக்கூடிய திட்டம் இந்த இலக்கை அடைவதற்கு, பல வழிகளை அவரவர்களுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்கிறார்கள். பாடம் சொல்லிக் கொடுப்பதை விட, குழந்தைகளே அறிவைத் தேடிக்கொள்ளும் முறையைக் கற்றுத் தருவதில்தான் அதிக கவனம் செலுத்துகிறார்கள்!

✣ இரத்தக் கொதிப்பு, இரத்த அழுத்தம், இருதயத்தில் இரத்தம் உறைதல் போன்ற இருதய நோய்கள் முதியவர்களுக்கும், அதிக சுகபோகம் அனுபவிப்பவர்களுக்கும் மட்டுமே ஏற்படுவதாகக் கருதப்பட்டு வந்தது! ஆனால் இன்றைய இளம் சமுதாயத்தினரிடையேயும், ஏழை மக்கள் மத்தியிலும் இருதய நோய்கள் தீவிரமாகப் பரவி வருவதாக கொழும்பு பெரியாஸ்பத்திரி திடீர் மரணப்பதிவு ஏடுகள், வைத்திய அறிக்கைகள் என்பனவற்றை ஆராய்ந்தபோது தெரிய வந்திருக்கிறது! வைத்திய நிபுணர்களுக்கே விளங்காத புதிராக இது இருக்கிறது!



✣ கருணாநிதியின் மருமக்கள் மூன்று பேர் இன்று மிகவும் பிரபலமானவர்களாக விளங்குகின்றார்கள். ஒருவர் முரசொலி மாறன். இவர் டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். தி. மு. க. முன்வரிசைப் பேச்சாளர்களில் இவரும் ஒருவர்! இன்னொருவர் செல்வம். "மறவன் மடல்" என்ற ஏட்டின் வெளியீட்டாளரும், ஆசிரியருமான இவர் ஒரு திரைப்படத் தயாரிப்பாளரும் ஆவார்! மற்றவர் பெயர் அமிர்தம், தமிழகத்திலுள்ள பிரபலமான ஒளிப்பதிவாளர்களில் இவரும் ஒருவர்! மாறன், செல்வம், அமிர்தம் ஆகிய மூவரும் சகோதரர்கள். கருணாநிதியின் சகோதரியின் பிள்ளைகள்! இவர்களை இந்த நிலைமைக்கு உயர்த்திவைத்தவர் கருணாநிதிதான்! இப்போது கருணாநிதியின் மகன் முத்துவும் பிரபலமாகிக் கொண்டு வருகிறார்! சினிமாத்துறையில் கதாநாயகனாகப் பிரவேசிக்கத் தொடங்கியிருக்கிறார் முத்து! இவர் நடிக்கும் படங்கள் வெற்றியடைந்தால் வருங்கால எம். ஜி ஆராக முத்துதான் விளங்குவார் என்று கருணாநிதி சார்புள்ள தி. மு. க பத்திரிகைகள் எழுதி வருகின்றன!

சொல்லின் செல்வன், கொட்டடி.


★ மன்னிக்க முடியாத குற்றம் எது?

பிறர் செய்யும் குற்றங்களை தவறு என்று சொல்லிக் கண்டிப்பவர்கள் அத்தகைய குற்றங்களைத் தாங்களே செய்வார்களே யானல் அது மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதப்பட வேண்டும்! இந்த வரைவிலக்கணத்தின்படி பார்த்தால், இந்த நாட்டிலுள்ள அரசியல்வாதிகளும் பெரிய அதிகாரிகளும்தான் மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள்!




க. அருண்மொழி,
திருகோணமலை.

★ அண்ணுவா, கருணநிதியா அதிர்ஷ்டசாலி?



அண்ணுதான்! அண்ணுவுக்கு ஒரு கருணநிதி கிடைத்தமாதிரி கருணநிதிக்கு இன்னமும் யாரும் கிடைக்கவில்லையே!

நா. ஜெயகௌரி, மானிப்பாய்

★ ஈடில்லாச் செல்வம் எது?

யாருடைய நல்வாழ்வைக் கண்டும் பொறுமைப்படாத பண்பு நம்மிடம் இருந்துவிட்டால், நன்மை மிகுந்த செல்வம், அதற்கு ஈடானது வேறென்றும் இல்லை என்பது திருவள்ளுவருடைய கருத்து! ஆனல், திருவள்ளுவருடைய கருத்துக்கு இந்தக் காலத்து மனிதர்களிடையே எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பது வேறு விஷயம்!

இ. சி. ஜெயபாலேந்திரா,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
(பரிசுபெறும் கேள்வி)

✶ ✶ பெரும் பான்மையின ரான யாழ் குடா நாட்டுப் பெற்றோர்கள் காதல் திருமணங் களை கடுமையாக எதிர்க்கிறார் களே, அது ஏன்?

"ஊருக்குத்தானடி உபதே சம், உனக்கும் எனக்கும் அல் லடி பெண்ணே" என்பதுதான் யாழ்ப்பாணத்து மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தத்து வமாக இருக்கிறது! சுயநல நோக்கோடு மட்டுமே சிந்திக் கத் தெரிந்த ஒரு சமூகத்தாரிட மிருந்து பரந்த மனப்பான்மை யை எதிர்பார்க்க முடியாது! பரந்த மனநோக்கு இல்லாத வர்கள் காதல் திருமணங்களை ஆதரிக்க மாட்டார்கள்!

கே. நடனசபாபதி, சுன்னாகம்

✶ அழகான ஆண்களை மட்டு ந்தானா? பெண்கள் விரும்புகிறார் கள்?

ஒரு ஆண் அழகாக இருக் கிறானா இல்லையா என்பது முக் கியம் அல்ல! அவன் ஒரு பெண் ணிடம் எப்படி நடந்துகொள் கிறான் என்பது தான் முக்கியம்!

செல்வி வசந்தா நவரத்தினம்,
கொழும்பு-13.


✶ கற்றவனுக்கும் கல்லாதவ னுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பட்டை தீட்டிய வைரத் துக்கும், பட்டை தீட்டாத வைரத்துக்கும் உள்ள வேறுபாடு தான்!

ம சபாரத்தினம், கொடிகாமம்.

✶ ஈழத்தின் சிறந்த கவிஞர் யார்?

ஆரவாரமில்லாத முறையில் மிகவும் அமைதியாக அற்புத மான கவிதைகளைப் படைத்துத் தந்தவர் கவிஞர் "மஹாகவி"!



அழகு, புதுமை, கருத்து, சுவை, நயம் இத்தனையும் நிறைந்திருக் கின்றன இவரது கவிதைகளில்! ஈழத்துத் தமிழ் கவிஞர்கள் எந்த நாட்டுக் கவிஞர்களுக்கும் இளைத்தவர்கள் அல்லர் என் பதை முதன் முதலில் உறுதிப் படுத்தியவர் மஹாகவி!

க. ராஜநாதன்,
ஊர்காவற்றுறை.

✶ என்னை ஒரு அரசியல்வாதி அடிக்கடி புகழ்கிறார் .... ?

பிறரை ஏணி மாதிரி உப யோகித்து தங்களை உயர்த்திக் கொள்பவர்கள் அரசியல் வாதி கள்! அவரை நம்பாதீர்கள்! உபயோகித்த ஏணியை உதைத் துத்தள்ள அவர்கள் கூசமாட் டார்கள்!

சி. சௌந்தரராஜன்,
கொழும்பு-5.


✶ சில பணக்காரப் பெண்கள் எல்லா வசதிகளும் இருந்தும் கலியாணம் செய்து கொள்ளா மல் இருப்பது ஏன்?

அதுதான் சொல்லி விட் டீரே, எல்லா 'வசதி'களும் இருக்கின்றன என்று! அப் புறம் ஏன் கலியாணம்?

ஆர். முருகையா, பொகவந்த லாவ.

✶ மக்கள் அரசாங்கத்தின் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுமா ?

எந்த மாற்றத்தைக் கேட்கிறீர்—மனமாற்றத்தையா, ஆள் மாற்றத்தையா ? நிச்சயமாக ஆள் மாற்றம் ஏற்படும் ! இப்போதுள்ள சட்டங்களின்படி, செனட்டர்களாகவுள்ள இரண்டு



அமைச்சர்களும் அடுத்த ஜன வரிக்குப் பின்னர் பதவியில் இருக்க முடியாது ! செனட் சபை ஒழிக்கப்பட்டு விட்டது ! எனவே, செனட்சபை உறுப்பினர்களாக மந்திரிசபையில் நியமிக்கப்பட்டிருந்த தபாலமைச்சர் குமாரசூரியரும் நீதியமைச்சர் ஜயமானேயும் செனட்சபை ஒளிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்கு மட்டுமே அமைச்சர்களாக இருக்க முடியும் !

க. பத்மநாதன், சாவகச்சேரி.

✶ வாழ்க்கையில் முன்னேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

நம்மைப் பற்றி எவ்வளவு உயர்வாக நினைக்கின்றோம் என்பதையும், மற்றவர்களைப் பற்றி எவ்வளவு மட்டமாக நினைக்கின்றோம் என்பதையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்! அப்போதுதான் முன்னேற முடியும்!

சா. சக்திதாசன்,
அக்கரைப்பற்று-7.

✶ ஈழத்தில் தமிழர், சிங்களவர் ஒற்றுமையை வளர்ப்பதில் பத்திரிகைகளின் பங்கு என்ன?

ஒரு நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டை வளர்ப்பதில் பத்திரிகைகளுக்குப் பெரும் பங்கு உண்டு! ஆனால் இலங்கையைப் பொறுத்த மட்டில், இந்த நாட்டுப் பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக தேசியத் தினசரிகள் என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளும் பெரிய தினசரிகள், தேசிய ஒருமைப் பாட்டைப்பேணி வளர்ப்பதற்குப் பதிலாக மிக மிக குறுகிய கண்ணோட்டத்துடனேயே நடந்து வந்திருக்கின்றன! மிகவும் அற்பமான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மக்களைத் தவறான வழியில் நடத்திச் செல்வதில் இந்த நாட்டுத் தினசரிகள் முதலிடம் வகிக்கின்றன! மிகவும் குறுகிய நோக்கமுள்ள மனிதர்களிடம் இந்தப் பத்திரிகைகள் சிக்கிக் கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணம்!

ஸ்ரான்லி தேவராசா, அரியாலை

★ ஈழத்து கலை இலக்கிய சுவைஞர்கள், கலை இலக்கியங்களை வெறும் இரசனை அளவில் தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள்! இவர்களை எப்படி வர்க்க முரண்பாட்டுத் தத்துவத்துக்கு அழைத்துச் செல்வது?

இன்று வரைக்கும் பெருமளவில் ஈழத்து இலக்கியச் சுவைஞர்களை வழிநடத்திச் சென்றவை இந்தியப் பத்திரிகைகள் தான்! இந்தப் பத்திரிகைகள் வர்க்க முரண்பாட்டுத் தத்துவங்களுக்கு அதிக அளவில் இடமளித்தது கிடையாது! இனிமேல் வர்க்க முரண்பாட்டுத் தத்துவங்களின் பக்கமாக ஈழத்துச் சுவைஞர்களை அழைத்துச் செல்லவேண்டுமென்று இங்குள்ள எழுத்தாளர்கள் முனைந்து செயல்படுவார்களேயானால் உமது விருப்பம் நிறைவேறலாம்! ஆனால், கலை, இலக்கியம் என்பன வர்க்க முரண்பாட்டுத் தத்துவங்களோடு மட்டுமே அடங்கிவிட்ட சங்கதிகளென்று நாம் நினைத்துவிடக் கூடாது!

'எல்லெம்மெஸ்' கொழும்பு-12

★ சினிமா நடிகைகள் எப்போது திருமணம் செய்துகொள்கிறார்கள்?

ஒன்று, அவர்களுக்கு மார்க்கெட் இல்லாமல் போகவேண்டும் அல்லது, ஏதாவது அவசரமான நெருக்கடி வந்து சேரவேண்டும்! இரண்டும் இல்லாவிட்டால் இவர்கள் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள்!

எம். விஸ்வலிங்கம், பேராதனை.

★ எதற்கு எடுத்தாலும் தயக்கம் காட்டுவது நல்லதா?

தயக்கம் காட்டுவதென்பது உணவில் உப்புச் சேர்ப்பது மாதிரி! அளவோடு இருக்க வேண்டும்; அதிகமாகக் கூடாது!

எஸ். எஸ்; மூளாய்.

★ நிதியமைச்சர் என். எம். பெரேராவினது பட்ஜெட்டைப் பற்றி பாராளு மன்றத்தில் நடந்த விவாதங்களைப் படித்துப் பார்த்தீர்களா?

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களைக் காட்டிலும், பஸ்ஸில் நான் பிரயாணம் செய்தபோது எனது காதில் விழுந்த பட்ஜெட் விம



ரிசனங்கள்தான் மிகவும் அருமையாக இருந்தன! நமது மந்திரிகளும், உயர் அதிகாரிகளும் இடையிடையே பஸ்ஸில் பிரயாணம் செய்தார்களேயானால் உபயோகமான பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவார்கள்!


எஸ். சிவசுப்பிரமணியம், குண்டசாலை.

★ பணக்காரப் பெண்கள் எவ்வித பயமும் இல்லாமல் நடக்கிறார்களே, எப்படி?

மாத்திரைகள்!

செ. கனகராசன், நுவரேலியா

✣ மேற்கு பாகிஸ்தான் ஏன் இவ்வளவு அநாகரிகமான முறையில் நடந்து கொள்கிறது?



முழுக்க முழுக்க சுயநல நோக்குடன் நடந்து கொள்ளும் பூட்டோ போன்ற அரசியல்வாதிகள் செல்வாக்குடன் உலவும் ஒரு நாட்டிடமிருந்து எப்படி அரசியல் நாகரிகத்தை எதிர்பார்க்க முடியும்? மதநாயக அடிப்படையில் பிறந்தது பாகிஸ்தான்! இப்போது அங்கே மதநாயகமும் இல்லை; ஜனநாயகமும் இல்லை!

கா. ஜெயசந்திரன், கொழும்பு-12

★ காதலின் அடிப்படை எது? அழகா, பணமா, அல்லது பண்பா?

எந்த அடிப்படையிலும் காதல் தோன்றலாம்! அழகின் அடிப்படையில் தோன்றும் காதல் மலருக்கு ஒப்பானது. எந்த நிமிடமும் இது வாடிவிடலாம்! பணத்தின் அடிப்படையில் தோன்றும் காதல் கண்ணாடியாலான ஒரு பாத்திரத்துக்கு ஒப்பானது. எந்த நிமிடமும் இது உடைந்து விடலாம்! பண்பின் அடிப்படையில் தோன்றும் காதல்தான் நிலைத்து நிற்கக்கூடியது. ஆனால், இந்தக் காலத்தில் பெரும்பாலான காதலுக்கு அடிப்படையாக இருப்பது அழகும், பணமும் தான்! இந்தக் காதல்கள் எல்லாம் தோல்வியில் முடிவதற்கு தவறான இந்த அடிப்படைதான் காரணம்!

சா. சுதாகரன், பாண்டிருப்பு.

★ நாகரிக விஞ்ஞானப் போக்கில் சாவைத் தடுப்பதற்கு 'பில்ஸ்' கண்டு பிடிக்கப்பட்டால்......

அந்தப் 'பில்லை' பயனற்றுப் போக்கக் கூடியதான மருந்தையும் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் வந்து சேரும்!

எம். ஆறுமுகம், பொகவந்தலாவ.

★ பெண்கள் இல்லாத இடம் எது?

காதல் வயப்பட்ட ஒரு பெண்ணின் மனம்! அங்கு ஒரு ஆணை மட்டுமேதான் எப்போதும் காணமுடியும்!

எம். யூ: சரீப்தீன்,
வாழைச்சேனை,

✶ 'மினி' உடை அணிந்து சைக்கிளில் பிரயாணம் செய்யும் பெண்களைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

சம்பவிக்கக்கூடிய 'விபத்து'க்களிலிருந்து சுலபமாகத் தப்பிக்கக் கூடிய 'பயிற்சி'யும் அனுபவமும் மிகுந்தவர்கள் தான் இந்த மாதிரியான காரியங்களில் ஈடுபடுகிறுர்கள் என்பது எனது கருத்து!

க. படிகலிங்கம், யாழ்ப்பாணம்

✶ ஒரு நல்ல அதிகாரி எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும்?

பிறர் செய்யும் குற்றங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வது போன்று தான் செய்யும் தவறுகளையும் உடனுக்குடன் தெரிந்து திருத்திக் கொள்பவராக இருக்க வேண்டும்! தன்னுடன் வேலை செய்பவர்களின் வழிகாட்டியாக அவர் தன்னைக் கருதிக் கொள்ள வேண்டுமே தவிர, அவர்களது அதிகாரியாக தன்னை நினைத்துக் கொள்ளக் கூடாது!


மு. ராமு: கொழும்பு-12.

✶ நான் வெகு நாட்களாக ஒரு பெண்ணை காதலித்து வந்தேன். இப்பொழுது அவள் என்னை விட்டுப்பிரிந்து சென்று விட்டாள். அவளை என்னுல் மறக்க முடியவில்லை. மறப்பதற்கு ஒரு வழி சொல்லுங்கள்?

சட்டையை மாற்றுவது மாதிரி சோடிகளை மாற்றும் மனிதர்கள் நிறைந்த இந்தக் காலத்தில், இதற்குப் போய் இவ்வளவு தூரம் கவலைப்படுகின்றீரே! காதலை ஒரு விளையாட்டுப் பொருளாகக் கருதி பசுமை கண்ட இடத்தை நோக்கிப் பாயும் பெண்கள் நிறைந்த இந்த உலகத்தில், உம்மைப்போன்றவர்கள் பாடு கொஞ்சம் கஷ்டம் தான்! இன்ஞெரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்குங்கள், பழைய கவலை மறந்துவிடும். ஆனுல் புதிய கவலை வந்து சேரலாம்!

எஸ்: கருணுகரன், கல்முனை,

✶ நமது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஐ. நா. சபைக்குச் சென்றதால் கிடைத்த பலன் என்ன?



ஐ. நா வின் அடுத்த பொதுக் காரியதரிசியாக நமது நாட்டைச் சேர்ந்தவரான ஷெர்லி அமரசிங்கா வரக்கூடிய சாத்தியக் கூறுகள் சிறிது அதிகரித்திருக்கின்றன! முன்னர் மூன்ருவது இடத்தில் நின்றவர் இப்போது இரண்டாவது இடத்தில் வந்து நிற்கிருர்! இந்த நிலை ஏற்பட்டது ஸ்ரீமாவோவின் ஐ. நா விஜயத்திஞல்தான்!

பவானி செல்லத்துரை, கொக்குவில்;

★ இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சைவ உணவுக்காரரா அல்லது அசைவ உணவுக்காரரா?



இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வட இந்திய, காஷ்மீர பிராமண குலத்தவர்! காஷ்மீர பிராமணர்கள் தாராளமாக மாமிசம் சாப்பிடுவார்கள்! இந்திரா காந்தி காலை உணவின்போது முட்டை சாப்பிடுகிருர்; மத்தியான உணவின் போது மாமிசம் சாப்பிடுகிருர்!

இ. நடராசா, சண்டிலிப்பாய்.

★ சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி சத்தம் போடுவதன் காரணம் என்ன?

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற பழமொழியை நன்ருக விளங்கிக் கொண்டவர்கள் அவர்கள்!

சி. மோகனதாசன், கடவத்தை.

★ எங்களது ஆசிரியர் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டவர். ஆனுல் மாணவர்கள் காதலிப்பதை கடுமையாகக் கண்டிக்கிருரே, காரணம் என்ன?

மாணவர்களது படிப்பு கெட்டுவிடும் என்று அவர் கருதுவது காரணமாக இருக்கலாம்! அல்லது தான் செய்தது தவறு என்பது அவருக்கு நிரூபணமாகியிருக்க வேண்டும்! பெரும்பாலும் பின்னதுதான் உண்மைக் காரணமாக இருக்க இருக்கும்!

எம். சந்திரன், யாழ்ப்பாணம்.

★ இந்திரா காந்தி மிகவும் அவசரமாக வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் செய்து வந்ததன் உண்மையான நோக்கம் யாது? இவரது நோக்கம் நிறைவேறியுள்ளதா?

வங்காள தேசப் பிரச்சினையின் உண்மை விவரங்களை விளக்குவதற்காகத்தான் இவர் உலகப் பயணம் சென்று வந்தார்! பெரும்பாலான உலகத் தலைவர்கள் இந்தியாவின் நியாயங்களை நன்கு உணர்ந்த போதிலும் வெளிப்படையாக ஆதரவு காட்ட மறுத்துவிட்டார்கள்! இந்திரா காந்திக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை!

ச. இரத்தினசிங்கம், வவுணதீவு.

★ தாங்கள் எந்த அரசியற் கட்சியைச் சார்ந்தவர்?

இந்த நாடு இவ்வளவுதூரம் சீர்கெட்டுப் போனதற்குக் காரணம் இந்த நாட்டு அரசியல் கட்சிகள்தான் என்று நினைக்கும் கட்சியைச் சேர்ந்தவன் நான்!

ஆர். ராமையா,
கட்டுகஸ்தோட்டை.

✶ எம். ஜி. ஆரை விட்டு ஜெயலலிதா பிரிந்து போய்விட்டாரா?

எம். ஜி. ஆரை ஒரு மாதிரியாக மட்டந்தட்டிவிட்டு, சினிமா உலகில் தனித்து நிற்க முயற்சி செய்தார் ஜெயலலிதா! ஆனால், சினிமா உலகில் நிலைமை தனக்குச் சாதகமாக இல்லையென்பது தெரிந்ததும் மீண்டும் எம். ஜி. ஆரிடம் வந்து சரணாகதி அடைந்துவிட்டார்! ஜெயலலிதாவின் சலசலப்புக்களுக்கு எம். ஜி. ஆர் எள்ளளவும் அசைந்து கொடுக்கவில்லை!

பா. இருதயமனோகரன்,
அல்வாய்.

✶ தமிழகப் பத்திரிகைகள் தடைபற்றி தங்கள் அபிப்பிராயம் யாது?


தமிழகப் பத்திரிகைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப் பட்டிருக்கின்றதே தவிர, தடை செய்யப்படவில்லை. வர்த்தக நிறுவனங்கள் மூலம் பத்திரிகைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்தியிருக்கும் அரசாங்கம், தனிப்பட்டவர்கள் சந்தா செலுத்தி பத்திரிகைகளை வரவழைத்துக் கொள்ளும் வழியை இலகுபடுத்தினால்நன்றாயிருக்கும்! ஆலமரத்தின் நிழலில் மற்றைய மரங்கள் எதுவும் வளர முடியாததைப் போன்று, தமிழகத்துப் பத்திரிகைகள் தொடர்ந்து பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டால் இங்குள்ள பத்திரிகைகள் வளர்ச்சிபெற முடியாது என்பதும் உண்மைதான்!

## சீயை விழுந்த குளம்!

✣ வன்னி நாட்டில் வரலாற்று முக்கியத்துவமுள்ள பல இடங்களின் பெயர்கள் அழிந்து அப்போது அவ்விடங்களுக்குப் புதுப்பெயர்கள் தோன்றியிருக்கின்றன, 'கற்சிலைமடு' என்று ஒரு இடம். போய்ப்பார்த்தால் இங்கே ஒரு நடுகல் நாட்டியிருக்கிறது. அதில் 'பண்டார வன்னியனை வென்ற இடம்' என்று ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறது. ஆனால் அதே இடத்தில் மிகப் பழைய கட்டடங்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. இந்துக் கோயில் இருந்த அடையாளம் இருக்கிறது, 'கற்சிலைமடு' என்ற பெயர் தோன்றுவதற்கு முன் அந்த இடத்துக்கு வேறு ஏதோ ஒரு பெயர் இருந்திருக்கவேண்டும். வன்னியில் புதுப் புதுப் பெயர்கள் உண்டாவது சகஜம், உதாரணமாக 'சீயை விழுந்த குளம்' என்று ஒன்று இருக்கிறது. சி. ஐ. (C. I.) என்பது கோப்பரட்டிவ் இன்ஸ்பெக்டர் (Co operative Inspector) என்பதன் சுருக்கம். ஒரு முறை ஒரு சி. ஐ. சங்கக்கடைப் பரிசோதனைக்குப் போய்விட்டுத் திரும்பும் போது-நல்ல வெறி! அந்தக் குளத்தில் தவறி விழுந்துவிட்டார். அன்று தொடக்கம் அந்தக்குளத்துக்கு 'சீயைவிழுந்த குளம்' என்று பெயர் வைத்துவிட்டார்கள்!

(உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை பேசக் கேட்டு எழுதியவர்: 'அபயன்')

✣ யூ. என். பிக்குள் இருந்து வந்த கோஷ்டிச் சச்சரவு இப்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. அந்தக் கட்சி பகிரங்கமாக இரண்டு பகுதியாகப் பிரியும் கட்டம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. யூ. என். பி. ஆட்சியில் இருந்த காலத்திலேயே அதற்குள் இரண்டு 'கட்சிகள்' இயங்கி வந்தன. ஒன்றின் தலைவராக டட்லி சேனநாயக்காவும், மற்றதன் தலைவராக ஜே. ஆர். ஜெயவர்த்



தனவும் இருந்து வந்தனர். தேர்தல் முடிந்து, கட்சி படுதோல்வி அடைந்த பின்னருங்கூட இந்த உள் கட்சிப் பூசல் மறையவில்லை. ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடுவதைக் காட்டிலும் பரஸ்பர கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுவதிலேயே இந்த இரு கோஷ்டியினரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்! டட்லியிடம் ஆள், அணி பலம் உண்டு! ஜே. ஆரிடம் மூளைபலம் உண்டு! இருவருடைய போட்டியும் எங்கு போய் முடியும் - கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பது போல, யூ. என். பியின் நாமமே இந்த நாட்டு அரசியல் உலகிலிருந்து மறைவதில்தான் போய் முடியும்? 'வைக்கோற்பட்டடைநாய்கள்' யூ. என். பிக்குள் அதிகம்!

✣ 837 தோட்டப் பாடசாலைகளில் 38 பாடசாலைகளை மட்டுமே பொறுப்பேற்று நடத்துவதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாம்! கடந்த பல மாதங்களாக கல்வியமைச்சிலிருந்து வெளியாகி வந்த செய்திகள், தோட்டப் பாடசாலைகள் அனைத்தையும் பொறுப்பேற்று நடத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை கல்வி அமைச்சு செய்து வருகின்றது என்ற நம்பிக்கையை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியிருந்தது! அந்த நம்பிக்கை இப்போது நாசமாகிவிட்டது! மலையைப் புரட்டி எலியைப் பிடித்த வேலையைத்தான் கல்வி அசைச்சு செய்திருக்கிறது!

✣ ஹாலிவூட் சினிமா நடிகை எலிஸபெத் டெய்லரின் ஐந்தாவது கணவன்தான் ரிச்சர்ட் பர்ட்டன்! இவர்கள் இருவருக்கும் இடையில் இப்போது அடிக்கடி பூசல்கள் கிளம்பிக்கொண்டு இருக்கின்றன! ரிச்சர்ட் பர்ட்டன் ஏற்கனவே திருமணமானவர்! ஆனால் எலிஸபெத் டெய்லரின் அழகில் மயங்கி, தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு, இவரைத் திருமணம் செய்துகொண்டார் ரிச்சர்ட் பர்ட்டன்! இப்போது எலிஸபெத் டெய்லருக்கு வயதாகிக்கொண்டு வருகிறது! அழகு போய்க்கொண்டு இருக்கிறது! பூசல்கள் கிளம்பிக் கொண்டு இருக்கின்றன; ரிச்சர்ட் பர்ட்டன் போனால் ஆறுவது கணவனை எலிஸபெத் டெய்லர் தேடவேண்டியதுதான்!

# ?

சுகுமாரன்

சிவகாமசுந்தரி கொழும்புக்கு உத்தியோகமாகி வந்து ஒருவருட காலமாகி விட்டது. இந்த ஒருவருட காலத்துக்குள் அவளது வாழ்க்கையில் நடந்த சங்கதிகள் பல;

அவள் உத்தியோகமாகி வந்து நான்காவது மாதத்தில் அவளது தந்தையின் மரணம் சம்பவித்தது. அந்த நாளிலிருந்துதான் அவளது வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் நிகழத் தொடங்கின என்று சொல்லலாம். இன்னொரு வகையில் பார்க்கப்போனால், அவளது வாழ்க்கை முறையில் ஏற்படவிருந்த மாற்றங்களுக்கான சில சூசகங்களை அவளது தந்தை உணர்ந்து கொண்டமையால் ஏற்பட்ட மனமுறிவுதான் அவரது மரணத்துக்குக் காரணமாக அமைந்தது என்றும் சொல்லலாம் !

சிவகாமசுந்தரி கிராமத்தில் பிறந்தவள். வளர்ந்ததும் படித்ததும் கூட கிராமத்தில்தான்.

அவளுடைய தந்தை ஆசிரியராகக் கடமையாற்றியவர்; ஆசிரியர் என்றால் கொஞ்சம் பழைமையான ஆசிரியர்; கண்டிப்பு, கட்டுப்பாடு என்ற விஷயங்களில் அளவுக்கு மீறிய நம்பிக்கையுடைய ஆசிரியர் !

கட்டுப்பாடு என்பது விஷயத் தெளிவின் அடிப்படையிலும், தேர்ந்த ஞானத்தின் அடிப்படையிலும் உருவாவது என்பதை உணராமல், சொல்வதைக் கேட்டு அப்படியே நடப்பது என நம்பியவர். அவரது இந்த நம்பிக்கையைக் குறை சொல்ல முடியாது. அவர் வளர்ந்த பாரம்பரியமும், அவரது சகாக்களால் மதிக்கப்பட்ட நம்பிக்கைகளும் அப்படிப்பட்டவை !

கண்மூடித்தனமான கண்டிப்புடனும், அர்த்தமில்லாத கட்டுப்பாடுகளுடனும் வளர்க்கப்படுகின்ற பிள்ளைகள் வாய்ப்புக் கிடைக்கின்ற நேரங்களில் எல்லா வேலிகளையும் தாண்டிப் பாய முற்படுகிறார்கள் என்பதற்கு அவரால் வளர்க்கப்பட்ட அவரது மகள் சிவகாமசுந்தரியே நல்ல அத்தாட்சி !

கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்படும் பிள்ளைகளுக்கு, தேவையையும் நியாயங்களையும் கருதி வேலிகளைப் பாயவேண்டும் என்ற உணர்வு சிறிது அந்த நிலையை யடைந்து, வேலிகளைப் பாய்வதற்காகவே வேலிகளைப் பாய்கின்ற நிலைக்கு கொண்டு வந்து விடுகிறது ! வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் இதனைச் செய்யத் தவறுவதும் கிடையாது ! சிவகாம சுந்தரீயும் இந்த ரகம்தான் !

கொழும்புக்கு உத்தியோக மாகி வந்தவுடனேயே சிவகாம சுந்தரியின் உள்ளத்தில் கிளு கிளுப்புப் பூக்கத் தொடங்கிவிட் டது.

ஊரில் இருந்தபோது கோயி லுக்குப் போவதென்றாலுங்கூட அவள் தனியே செல்வது கிடை யாது. அம்மாவுடனோ அல்லது பாட்டியுடனோதான் போவாள். பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எப் போதும் தம்பியின் துணையுடன் தான் செல்வாள். வளர்ந்த பெண் தனியே எங்கும் செல் லக்கூடாது என்ற விஷயத்தில், அது எவ்வளவு கிட்ட உள்ள இடமாக இருந்தாலுஞ் சரி தான், சிவகாமசுந்தரியின் குடும் பத்தினர் வெகு கண்டிப்பான வர்கள். அந்த ஊர் வழக்கமும் அதுதான். ஊர் வழக்கத்தைக் காட்டிலும் அவளது தந்தை யின் கட்டுப் பாடுகள் ஒருபடி அதிகமானவை.

ஊரிலுள்ள வாலிபர்கள் நகரத்து வாலிபர்கள் மாதிரி அல்ல. ஊர் வாய்க்குப் பயப் படும் குணம் அவர்களிடம் உண்டு. சிவகாமசுந்தரி கோயி லுக்குப் போகும் போதெல் லாம் சில வாலிபர்கள் அவளை ஒரு மாதிரியாகப் பார்ப்பது உண்மைதான். ஆனால் இந்தப் பார்வைகள் ஒரு மாதிரியான கடைக்கண் பார்வைகளாகத் தான் இருக்கும்; பார்க்கத் தூண்டும் அழகு சிவகாமசுந்தரி யுடையது!

இவளைப் பலர் பார்த்தா லும், இவளின் பார்வையில் பட்டவன் ஒருவன்தான்!

அவன் பெயர் ரகுநாதன்: ஒருவகையில் இவளுக்கு உறவு முறையானவன். இவளுடைய தகப்பனாரிடம் படித்தவன். அதன் காரணமாக ஆசிரியர் என்ற நன்றி உணர்வோடு நட ந்து வந்தவன். அவனுடைய அத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக இவளுடைய தகப் பனாரினாலும் நன்கு விரும்பப் பட்டவன்.

தகப்பனாருக்கு விருப்பமான வன் என்பதும், நடை உடை விஷயங்களில் நல்லவன் என்ப தும் தெரிந்ததும் இவளுடைய தாயார் போட்ட திட்டங்கள் வேறு! வயது வந்த திருமண மாகாத பெண்ணை வீட்டில் வைத்திருக்கும் எந்தப் பெண் ணுடைய தாயாரும் போடும் திட்டங்கள்தான் அவை!

அந்தத் திட்டங்கள் சாடை சாடையாக சிவகாமசுந்தரிக்குத் தெரிய வந்ததும் அவளுடைய உள்ளத்தில் கிளுகிளுப்பூட்டும் சில நினைவுகள் தோன்றின.

அந்த நினைவுகள் நாளுக்கு நாள் வளர்சியடைந்துகொண்டு வந்தன.

நினைவுகளின் நிழல் முகத் தில் தெரிவது வழக்கம்.

முகத்தில் தெரிந்த நிழல்க ளைக் கொண்டே நினைவுகளை அளக்க முற்பட்டார்கள் சிவ காமசுந்தரியும் ரகுநாதனும்!

கண்கள் இருக்கும்போது வாய்ப்பேச்சு தேவையில்லை,

சிவகாமசுந்தரியினதும் ரகு நாதனதும் கண்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டன.

இவளுடைய தகப்பனரை அடிக்கடி வந்து பார்க்கத் தலைப் பட்டான் ரகுநாதன். அவருக்கு வேண்டிய உதவிகளையும் மிகவும் ஆர்வத்தோடு செய்து தந்தான்.

அவரைச் சந்திக்க வரும் நேரங்களில் ஜன்னலின் வழி யாகத் தெரியும் சிவகாமசுந்த ரியின் கண்களைக் கண்டு ஆனந்த பரவசத்தில் மூழ்கினன்.

சிவகாமசுந்தரிக்கு இந்த உத்தியோகம் கிடைத்ததில் அவனுக்கும் பெரும் பங்கு உண்டு.


அவன்தான் யார் யா ரையோ கண்டு, எவரெவரோ சிபாரிசுகளையெல்லாம் கொண்டு வந்து, மகளை உத்தியோகத் துக்கு அனுப்புவதா வேண் டாமா என்று நினைத்துக்கொண் டிருந்த ஆசிரியருக்கு உற்சாக மூட்டி, அவருடைய பணக் கஷ் டங்களும் வேறு சில பிரச்சினை களும் தீருவதற்கு சிவகாமசுந் தரி உத்தியோகம் பார்ப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் அதன் அவசியத்தையும் எடுத் துக்காட்டி, அவள் இந்த வேலை யில் சேருவதற்குக் காரணமாக இருந்தவன்.

ஆனல்.........

கொழும்பில் உத்தியோகம் ஏற்ற முதலாவது மாதத்தி லேயே சிவகாமசுந்தரியின் போ க்கில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கின.

முதலில் அவளது உடையில் மாற்றம் ஏற்படத் தொடங்கி யது.

அவளுடைய அலுவலகத் தில் வேலைசெய்த மற்றப் பெண்



கள் பட்டாம் பூச்சிகள் மாதிரி சிறகடித்துப் பறந்து கொண்டி ருப்பதைப் பார்த்தபோது, தான் மட்டும் பழைய கட்டுப்பெட்டி மாதிரி இருப்பதை நினைக்க அவ ளுக்கு என்னவோ மாதிரி இருந் தது.

உடலை மறைப்பதற்காக உடை உடுத்திய அவள், உட லின் அழகையெல்லாம் அப்ப டியே வெளிக்காட்டக் கூடிய முறையில் உடை அணியத் தொடங்கினள்.

பட்டணத்துப் பெண்கள் உள்ளத்தை மினுக்குவது கிடை யாது. உடலைத்தான் மினுக்கு வார்கள். பட்டணத்துக்குப் போன சிவகாமசுந்தரியும் இந் தப் பாதையிலேயே போகத் தொடங்கினள்.

உடையில் மாற்றம் ஏற் பட்டது போலவே அவளது நடையிலும் மாற்றம் ஏற்பட் டது.

கிராமத்தில் இருந்தபோது பிற ஆண்களின் கண்களை நேருக்கு நேர் பார்க்கக் கூசிய அவளது

கண்கள், ஆண்களின் கண்கள் பட்டதும் உடனே இமை தாழ்ந்து பழக்கப்பட்ட அவளது கண்கள், பட்டணத்துப் பழக்கத்தில் தங்களது பழைய தன்மையை இழந்தன;

நடையில் ஒரு குலுக்கல், தளுக்கல் எல்லாம் எப்படியோ வந்து சேர்ந்தன.

கண்களை அகல விரித்துப் பார்க்கவும், கண்களைச் சுழற்றிச் சுழற்றிப் பார்க்கவும், கண்களில் ஒருவித கவர்ச்சியை ஏற்றி ஆண்களை மயக்கக்கூடிய விதத்தில் பார்க்கவும் இவளால் எப்படி முடிகிறது என்று கிராமத்தில் இவளை அறிந்தோர் அத்தனை பேரும் ஆச்சரியப்படக்கூடிய முறையில் இருந்தன இவளது பார்வைகள்!

கிராமத்துப் பெண்களுக்கே உரிய இயற்கையான அழகு மிளிரும் வாளிப்பான இவளது உடற்கட்டில் பட்டணத்து நாகரிக மேல் பூச்சு ஏறியபோது இவளது அழகு எந்தத் தவமுனிவனது சித்தத்தையும் குலைக்கக் கூடியதான மெருகுடன் தோற்றம் தந்தது!

பஸ்ஸிலும், தெருவிலும், அலுவலகத்திலும் இவளைப் பார்த்துப் பெருமூச்சுவிட்ட ஆண்கள் பலர்!

தன்னைப் பிறர் பார்ப்பதையும், அந்தப் பார்வையில் தெரிந்த அர்த்தங்களையும் உணர்ந்துகொண்ட இவள், ஏனோ தெரியாது, அதில் ஒரு பெருமை கொண்டாள்!


உடை, நடை, பார்வை என்பனவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் சிறிது சிறிதாக இவளது உள்ளத்தையும் பாதித்தன.

இவளது உள்ளத்தில் சில புதிய உருவங்களின் நிழல்கள் விழத் தொடங்கின;

அந்த நிழல்களுடன் ஒப்பிடும்போது ரகுநாதன்......

அவனைப்பற்றி நினைப்பது ஏதோ தனது தகுதிக்குக் குறைந்த செயல் என்பதுபோல இவள் நினைக்கத் தொடங்கினாள்.

இவளது நினைவுகள் 'செயல்களாகப் பரிணமிக்கத் தொடங்கியபோது, ரகுநாதனுக்கு ஓர



ளவுக்கு அதிர்ச்சியாக இருந்த போதிலும், அவனிடமிருந்த மன உறுதி காரணமாக அதனை ஒருவாறு சமாளித்துக்கொண்டான்.

இந்த ஏமாற்றத்தை எப்படியாவது சமாளிக்கவேண்டும் என்ற தார்மீக ஆவேசம் ரகுநாதனுக்கு எழுந்தபோது ஊரிலுள்ள ஒரு சாதாரணமான பெண்ணைப் பார்த்துத் திருமணமும் செய்துகொண்டான்.

அவனுக்கு வாய்த்தவள் நல்லவள் மட்டுமல்ல; வல்லவளும் கூட! இரண்டே மாதத்தில் உடைந்துபோன அவனது உள்ளத்தைச் சீர்செய்து விட்டாள்.

இடையில் ஒரு முறை, தகப்பனாரின் மரணச்சடங்குகளுக்காக, ஊருக்கு வந்தபோது ரகுநாதனின் இல்லறத்தைப் பார்த்த சிவகாமசுந்தரி, நாகரிகம் எள்ளளவும் இல்லாத அவனது வீட்டையும், கிராமத்துச் சித்தாந்தங்களில் ஊறிப்போன அவனது மனைவியையும், புதிதாக ஏற்பட்ட குடும்பச் சுமையினாலும் வேறு சில தொல்லைகளினாலும் உழைத்துக் களைத்துக் கறுத்துப் போயிருந்த ரகுநாதனையும் பார்த்துவிட்டு ''நல்லவேளை நான் இந்தப் படுகுழியில் விழாமல் தப்பினேன்'' என்று மனமகிழ்ந்தாள்.

அதே நேரத்தில்,

கொழும்பில் தனக்கு ஏற்பட்டிருந்த புதிய நட்பையும், அந்த நட்பினால் தனக்குக் கிடைக்கப்போகும் எதிர்காலஇன்பவாழ்வையும் எண்ணிய போது அவளது மகிழ்ச்சி இரண்டு மடங்காகியது!

ஆம், கொழும்பில் அவளுக்கு ஒரு புதிய நட்புத்தான் கிடைத்திருந்தது;

அழகான கார், நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள அற்புதமான பங்களா, கவர்ச்சியும் இளமையும் அழகும் குறும்பும் நிறைந்த கணவன் என்ற இத்தனையும் இந்த நட்பினால் தனக்குக் கிடைக்கும் என்று இவள் நம்பினாள்!

கிராமத்தில் அந்த நாட்களில் இவருக்குக்கிடைத்த நட்பு உள்ளத்தளவில் மட்டுமே ஏற்பட்ட நட்பு!

---



✣ நன்றாக ஆங்கிலம் பேசத் தெரிந்த தமிழ் நடிகைகளுள் லட்சுமியும் ஒருவர்! தமிழ்நடிகைகளுள் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள்தான் நன்கு படித்தவர்களாக இருக்கிறார்கள்! நடிகை லட்சுமியும் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்தான்!

ஆனால்......

கொழும்பில் கிடைத்த நட்பு அப்படியல்ல!

உள்ளத்து நட்பில் நம்பிக்கையில்லாதவர்கள் பட்டணத்து வாசிகள். அதிலும் ஒரு மாதிரியாக வாழ்க்கையின் மேல் மட்டத்தில் உள்ளவர்கள் வாழ்க்கை வசதிகளையும், வாழ்வின் இன்ப நுகர்வுகளையும் அதிகரித்துக் கொள்ளச் செய்யும் ஒரு சாதனமாகத்தான் நட்பையும் கருதி வருபவர்கள்!

இவளுடைய பட்டணத்து நட்பு அடிக் கணக்கில், அங்குலக் கணக்கில் இடைவெளி இருக்கத்தக்கதாக ஆரம்பித்து, கடைசியில் இடைத்தூரம் சைபராக இருக்கக்கூடிய நிலையில் வந்து முடிந்திருந்தது.

இவள் பாவம்! கனவு கண்டுகொண்டு இருக்கிறாள்!

இவளது கனவுகள் சிதைந்து மாயைத்திரை விலகப்போகின்றன. நாள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

இவளோடு நெருங்கிப் பழகி, ஏதேதோ ஆசை வார்த்தைகள் காட்டி எப்படியெப்படி எல்லாமோ மயக்கி, தனது நெருக்கத்தின் சின்னத்தை அழியாத முத்திரையாக இவளிடம் பதித்துவிட்ட அந்தக் கனவான், ஒரு பசுத்தோல் போர்த்திய புலி என்பதை இவள் அறியும் போது

இவளின் கதி

இவளது வயிற்றில் வளரும் குழந்தையின் கதி...

? !

# உப்பு! உப்பு?

உப்பில்லாத பண்டம் குப்பையிலே என்று சொல்லுவார்கள். உப்பில்லாத பண்டங்கள் சீக்கிரம் கெட்டுவிடும். அந்தப் பண்டங்களில் சுவையும் இருக்காது. நோயுள்ள காலங்களில் உப்புச் சேர்த்து உணவுகளைச் சாப்பிடும்போது, களைப்பை நீக்கித் தெம்பைக் கொடுக்கும். உப்பு உடம்பு உஷ்ணத்தைக் குறைக்கும் சக்தி வாய்ந்தது மலம் சரியாகக் கழியாதவர்களுக்கு, உப்பை உபயோகிப்பதனால் மலப்போக்கு சரியான முறையில் உண்டாகும். இவ்வளவு நன்மை செய்யும் உப்புக்கு தீமை செய்யும் குணமும் இருக்கிறது.

உப்பை அடிக்கடி உபயோகிப்பதனாலும், அதிகமான அளவு உபயோகிப்பதனாலும் சிறுநீர் மூலம், தாதுக்களும் உப்பாகி வெளி வருவதுடனே, உடம்பை உப்ப வைத்து, இருதயத்தைக் கெடுக்கின்றது. இருதயம் சம்பந்தமான இரத்தக் குழாய்கள், அது சம்பந்தப்பட்ட நரம்பு முதலியவைகளை, இது நைந்து தளர்ச்சியடையச் செய்கின்றது. இருதய நரம்புகள் தளர்ச்சியடைவதினால், சர்வ சாதாரணமாக, உடம்பில் பல நோய்கள் உண்டாகின்றன. இரத்தக் கொதிப்பு, நரம்புத் தளர்ச்சி, கைகால் நடுக்கம் போன்ற வியாதிகளை உப்பு உண்டாக்குகின்றது.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது உண்மை தான்! ஆனாலும், உப்பை மிகுதியாக உணவுடனே சேர்க்கின்ற கெட்ட பழக்கத்தைத் தவிர்க்க வேண்டும்!

# மனங்கள் பேசுமா?

"கல்முனை கலைராஜி"

வழக்கமாக ஒன்பது பத்து மணிக்கெல்லாம் படுத்துறங்கும் நிர்மலா இன்று ஏனே நித்திரை வராமல் கிடந்து புரள்கிருள். இல்லை புழுங்குகிருள் என்று தான் கூறவேண்டும். அர்த்த மற்ற கற்பனைகள், கோபுரத்தில் அவளை ஏற்றிவைத்திருக்கும் உன்னதமான இலட்சியத்தைத் தட்டி உடைக்கப்பார்க்கும் இனம்புரியாத சபல உணர்ச்சி!... ஒரு வகை மனேரம்மிய சுகந்த நினைவு... ஒன்றுடன் ஒன்று முட்டிமோத அவளுக்குத் தூக்கமே வரவில்லை.

"மனங்கள் பேசுமா"? அடிக்கடி அவள் மனதிலே எழுந்து புதிதாக அவளைக் குழப்பி வைக்கும் கேள்வி இதுதான்! கண்கள் தாம் அதிகம் கதைபேசுகின்றன என்கிருர்கள். அப்படியானல் மனங்கள் என்ன பேசும்...?

ஏழைகளின் கண்ணீர் வறுமையைக் கூறும்; அன்பைக் கூறும். பருவமுள்ள இளம் பெண்ணின் பார்வை ஆசையைக் கூறும்; தனக்குப்பிடித்த தலைவனைக் கண்டதும் நாணித் தலை குனியு ; பண்பை வெளிப்படுத்தும்; ஏதும் பேசிவிடும் என்றே என்னவோ கண்கள் நேருக்கு நேர்பார்க்க அஞ்சும். மனங்களுக்கு இப்படியான புறவெளிப்பாடுகள் இல்லையல்லவா..? அப்படியானல் அவை என்ன பேசும்...? இதைப்புரிந்து கொள்ளுவது எப்படி...?

திருமணமே செய்யக் கூடாது. அது ஒரு விடுபட முடியாத முள்வேலி என்றெல்லாம் நினைத்து ஒரு வெறுப்புக் கொண்டு தனக்கென ஒரு உயரிய இலட்சியத்தை வகுத்து, எளிமையுடன், அடக்கமுடன், எல்லோராலும் பாராட்டப் பெற்று, அந்த மகிழ்ச்சியிலே குறைவையும் நிறைவாகக் கருதி வாழும் நிர்மலாவுக்கு, கடந்த ஒரு மாதகாலமாக ஒரு புதுச் சபல உணர்ச்சி தன்னையறியாமல் தனக்குள் எழுவதைத் தடுக்க முடியவில்லை தத்துவங்கள், விளக்கங்கள்; சிருஷ்டிகளின் பூரணத்துவம் அவள் வாழ்வியல் நடைமுறையில் கண்டுணர வேண்டிய முக்கிய கட்டங்கள் என்பதை உள்ளூர நினைத்திருந்தாலும் அதற்கான செயற்திட்டங்களில் அவள் இன்னும் பங்கு கொள்ளவில்லை. வாசிப்பது, சிந்திப்பது, தெளிவது இவைமூன்றும் அவள் அறிவின் பரிணும வளர்ச்சி எனக்கருதிஞள். இளமை வயதின் இனிமையான உணர்ச்சிகளுக்குக் கட்

டுப்பாடு விதித்தல் வாழ்க்கை அமைதியாகச் செல்வதற்கு ஒரு விதி முறை எனவும் நினைப்பவள் நிர்மலா.

அப்படியான நிர்மலாவுக்குத்தான் நித்திரையைக் கலைக்கும் ஓர் உணர்வு - இன்ப உணர்வு. அவள் எதிர்பார்க்கும் தன்மைகளும் அவளுக்குப் பிடித்த கொள்கைகளும் நிரம்பிய பூரண மனிதனை இனங்கண்டு கொண்டதின் விளைவாக இந்த உணர்வு ஏற்பட்டிருக்கலாம். அப்படியானால் அவள் நினைக்கும் 'அவர்' மனமும் பேசுமா...?

புரண்டு புரண்டு படுக்கிறாள்...

அவள் ஆத்மாவின் அடிநாதமாக 'மனங்கள் பேசுமா' என்னும் நாதமே ஒலிக்கிறது.

எத்தனையோ ஆடவர்களோடு தூய உள்ளத்துடன் பழகுகிறாள். அவர்களிடமெல்லாம் பரிசுத்தமான அன்பு... சகோதர பாசம். ஆனால் அவள் மனதிலே புகுந்து அமர்வதற்குத் துடிக்கும் 'தெய்வத்' தானம் ஒரே ஒருவருக்கு மட்டும்தான் உண்டு. அந்த ஒருவரின் அன்பைப் 'பரிசோதனை' செய்த பிறகு தான் தன் இதய பீடத்தில் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்னும் உறுதியும் அவளுள் எழுகிறது.

அவள் அன்புக்காக... அவளின் கனிவான ஒரு பார்வைக்காகத் 'தவம்' கிடக்கும் வாலிபர்கள்தாம் எத்தனை ...? அத்தனை பேரையும் விஞ்சும் அழகனையா அவள் நேசிக்கிறாள்...? இல்லை; பணமுள்ளவனையா...? இல்லவேயில்லை; அப்படியானால் சகல நற்பண்புகளும் நிறைந்த ஒரு நல்ல குணமுள்ளவனைத் தானே நல்ல நோக்குடையவள் விரும்புவாள்?

அவள் விரும்பலாம். அவன்...?

அதற்குத்தான் அவள் தனக்குள்ளே கேட்கிறாள், 'மனங்கள் பேசுமா' என்று! காலத்தைத் தவிர இதை உணர்த்த வல்ல சக்தி வேறு எதற்கு உண்டு ?

அன்று, நிர்மலா 'அவ'னை எதிர்பாராத விதமாகச் சந்திக்கிறாள். அவன் 'அவ'ளைக் காண்பதற்காகவே காத்திருந்தான். அவன் அவளுக்கு ஒரு புத்தகம், அதுவும் அவளுக்குப் பிடித்தமான அறிவு நூல் ஒன்றைக் கொடுக்கிறான். நீட்டி வாங்கிய அவள் பட்டுக்கரங்கள் படபடக்கின்றன. அவனை நேருக்கு நேர் பார்க்க அஞ்சுகிறாள்.

அவன் பார்க்கிறான்..

அவள் பார்க்கவில்லை; நாணம் மேலிட ஓடிவிட்டாள். அவன் நினைத்தான், ஆயிரத்தில் ஒருத்தி என்று. அவள் நாணம் மேலிடத்தனக்குள்ளே கேட்கிறாள்,

'மனங்கள் பேசுமா?' என்று!

---

**கேள்வி – பதில்**

**'வெள்ளி'**

**226, காங்கேசன்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

சிறந்த கேள்விக்கு ரூபா 5/- பெறுமதியுள்ள புத்தகம் பரிசு கிடைக்கும். மேலேயுள்ள முகவரியை வெட்டி அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்புக.

VELLI—*Tamil Monthly* Vol. 1 No. 9 December 1971

இந்த நவம்பர் மாதப் பிற்பகுதியில்

இலங்கை எங்கும் கிடைக்கும்!

# ஆனந்தா

திருக்குறள்

# கலண்டர்

எல்லா அம்சங்களும் பொருந்திய

ஒரு கவர்ச்சிகரமான தயாரிப்பு!

**சென்ற ஆண்டில் ஆனந்தா திருக்குறள் கலண்டர்**
**கிடைக்காமல் ஏமாற்றமடைந்தோர் பலர்.**
**ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்திக்கொள்ளுங்கள்!**

வர்த்தகர்கள் உடனடியாகத் தொடர்புகொள்க:

## ஆனந்தா அச்சகம்

**226,** காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்,

தந்தி: 'அச்சகம்' தொலைபேசி: 348

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.